1982 மார்ச் 3]

அப்படிப்பட்ட பள்ளிகளிலே நேரடியாக ஊதியம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். அப்படிப்பட்ட நிறுவனங்களை தவறு செய்கிற நிறுவனங்கள் என்று கணக்கில் எடுத்துக் கொண்டு அந்த ஆசிரியர்களுக்கு நேரடியாக சம்பளம் கொடுக்கிற முறை இப்போது இருக்கிறது. நான் சொல்ல விரும்புவது முழுச் சம்பளம் நாமே தருகிற காரணத்தால் எல்லா பள்ளிகளிலும் புகார் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நேரடியாக தருவதற்கு இப்போது பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். முதலிலே ஒரு மாவட்டத்திலே பரிசீலித்துப் பார்க்கலாம் என்று ஒரு கருத்து இருக்கிறது. செங்கல்பட்டு மாவட்டத்தை எடுத்து அந்தத் திட்டத்தை அமுல் நடத்தி, அந்த அனுபவத்தை வைத்துக் கொண்டு மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கலாம் என்ற யோசனை இப்போது அரசின் கவனத்தில் இருந்து வருகிறது

திரு. டி. மணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் சம்பளம் நேரடியாக அரசாங்கம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தும் தெற்கு பாலவிளை என்ற இடத்தில் ஆசிரியர்கள் ஆறு மாத காலமாக சம்பளம் கிடைக்காமல் நீதிமன்றங்களுக்குச் சென்று தடையுத்தரவு வாங்கியிருக்கிறார்கள். அந்த ஆசிரியர்கள் புகார்கள் எல்லாம் தந்திருக்கின்றார்கள். அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆறுமாத சம்பளம் கிடைக்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசுகிற போதே நீதிமன்ற தடையுத்தரவு இருக்கிறது என்று சொன்னார்கள். அதை மீறி ஏதாவது செய்தால் நாம்தான் பதில் சொல்லவேண்டி வரும்.

காரைக்குடியில் பல்கலைக் கழகம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 326.—திரு. து. புருஷோத்தமன் மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

காரைக்குடியில் ஒரு பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறதா!

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆம்.

[1982 மார்ச்

திரு. த. புருஷோத்தமன்: தலைவர் அவர்களே, எப்போது அந்த பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்படும். அதற்காக எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அதற்காக அமைக்கப்பட்ட குழுவினுடைய அறிக்கையை நாம் பரிசீலிக்கிறோம். பரிசீலித்து முடிவு எடுத்த பிறகு இறுதியான நடவடிக்கையைப் பற்றிச்சொல்ல விரும்புகிறேன்.

திரு. த. புருஷோத்தமன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, உத்தேசமாக எந்த ஆண்டு அந்தப்பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப் படும் என்பதை அறிவிக்க இயலுமா!

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்—மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது நமக்கு இருக்கிற அதிகாரத்தை வைத்துக் கொண்டு ஒரு மாதத்திலேயே கூட நாம் ஆரம்பித்து விடலாம். எப்போது ஆரம்பிப்பது என்பதல்ல இப்போது இருக்கிறபிரச்சினை எப்படி ஆரம்பிப்பது என்பதைத்தான் நாம் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். அதை முடிவு செய்ததற்கு பிறகு நாம் எப்போது வேண்டுமானாலும் ஆரம்பித்துக் கொள்ளலாம். ஆக ஆரம்பிப்ப திலே எந்த விதமான தடையும் இல்லை. ஆனால் இப்போது மத்திய அரசு என்ன கேட்டிருக்கிறது என்றால் புதிய பல்கலைக் கழகங்கள் ஆரம்பிக்கப்படுகிறபோது அவர்களைக் கலந்து ஆலோசிக்க வேண்டுமென்ற ஒரு யோசனையைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நமக்கும் அதிகாரம் இருக்கிறது.

திரு. சி. த. சிதம்பரம்: தலைவர் அவர்களே, இரண்டாண்டுக் காலமாக இப்படியே சொல்லப்பட்டு வருகிறது. வருகிற ஆண்டிலாவது ஆரம்பிக்கப்படுமா மத்திய அரசாங்கத்தைக் கேட்டு வருகிற ஆண்டிலாவது தொடங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இப்படியே சொல்லிக் கொண்டு, பேசிக்கொண்டு வருவது எல்லாம் இதற்கு முன்னால் இருந்த அரசின் நடவடிக்கையாக இருக்கலாம். எங்களைப் பொறுத்தவரை பல்கலைக் கழகங்களை அதிகமாகத் தொடங்கி வருகிற புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களின் அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன்: காரைக்குடியிலே மத்திய எலக்ட்ரோகெமிக்கல் ரிசர்ச் இன்ஸ்டிடியூட் இருக்கிறது. அங்கே ஆரம்பிக்கப்பட இருக்கின்ற பல்கலைக் கழகத்திலே அது சம்பந்தப்பட்ட பாடத் திட்டங்கள் எலக்ட்ரானிகல் போன்ற பாடங்கள் கற்பிப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்க அரசு முன்வருமா?

1982 மார்ச் 31]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : காரைக்குடியிலே பல்கலைக் கழகம் தொடங்குவதற்குக் காரணமே இராமநாத புரம் ஒரு பின்தங்கிய மாவட்டம், அந்த மாவட்டத்திலே இருக்கின்ற பிரச்சினைகளை நன்கு ஆராய்ந்து அந்த ஆராய்ச்சி யின் முடிவின் காரணமாக அந்த மாவட்டத்தை முன்னுக்குக் கொண்டுவரக்கூடிய அளவுக்கு அந்தப் பல்கலைக் கழகம் அமைய வேண்டுமென்று விரும்புகிறோம். அங்கே நடைபெறக் கூடிய ஆராய்ச்சிகள் விஞ்ஞான ரீதியாகவும் சமூக பொரு ளாதார ரீதியாகவும் சமுதாயத்திற்கு நன்மை பயக்கக்கூடிய முறையிலே நடைபெறும்.

கல்விக் கூடங்களில் உடல் ஊனமுற்றவர்களுக்காக இட ஒதுக்கீடு.

*வினா எண் 327 **திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) தமிழகத்தில் உள்ள கலைக்கல்லூரிகள், தொழில் பயிற்சி பள்ளிகள், பொறியியல் கல்லூரிகள் ஆகியவைகளில் உடல் ஊனமுற்றோர்களுக்கு என இடங்கள் ஒதுக்கப்படுகிறதா?

(ஆ) இல்லையெனில ஒதுக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றோர்களுக்கு கல்வி நிறு வனங்களிலே பொறியியல் கல்லூரிகளிலே இடம் ஒரு குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட் டார்கள். அந்த இட ஒதுக்கீட்டை தனியார் கல்வி நிறுவனங் களிலும் அமல்படுத்தச் சொல்லி அரசு உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இட ஒதுக்கீடு என்பது பிற்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் உடல் ஊனமுற்றோர் ஆகியவர்களுக்கு தனியார் கல்வி நிறுவனங் களிலும் செய்யப்படவேண்டுமென்று சொல்லி நாம் அந்த நட வடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், தனி யார் நிறுவனங்கள் ஒரு சங்கத்தைச் சேர்த்துக்கொண்டு ஒரு கூட்டத்தைக் கூட்டி அந்த முறையில் கட்டாயப்படுத்தக் கூடாது என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றி இருப்பதாகப் பத்திரிகையிலே பார்த்தேன். அப்படிப்பட்டவர்கள் அரசாங்கம்